
உ

ஓம் ஜெய துர்க்காயை நம



அபிராமி அந்தாதி - ஸ்ரீ துர்க்காதேவி அஷ்டகம் - உமா தேவியார் தமிழ் அர்ச்சனை மலர் - திருவிளக்கு பூசை வழிபாடு அர்ச்சனை (தமிழ்) - சுமங்கலிகள் பிரார்த்தனை - காயத்ரீ மங்களம் - சமரசப் பிரார்த்தனை ஆகியவை அடங்கிய

# தொகுப்பு மலர்

அன்பளிப்பு : சாந்தி அச்சகம்

# பதிப்பகத்தாரின் நோக்கு...... ......!

என் இளவயதில் இருந்தே, என் உள்ளத்தில் இருந்த ஆவல் சமய நூல்களை - தினம் வழிபடக் கூடிய முறையில் இந்துக்கள் கையில் இருக்கவேண்டும் என்பது. குறிப்பாய் தமிழில் இருக்க வேண்டும் என்பது. அதன் வழி, துர்க்கா தேவி அஷ்டகம் - உமாதேவியர் தமிழ் அர்ச்சனை மலர் - பிள்ளையார் தமிழ் அர்ச்சனை - கந்த சஷ்டி கவசம் - அபிராமி அந்தாதி - கந்த சஷ்டி கவஷம் ஆறு தளங்களுக்குமானது. முருகன் தமிழ் அர்ச்சனை மலர் ஆகியவை (இலவச வெளியீடாக) வெளியிடப்பட்டது.

இப்பொழுது உங்கள் கைகளில் இருப்பது 8 வது வெளியீடான (2 வது பதிப்பு) அபிராமி அந்தாதி, தொகுப்பு மலர் ஸ்ரீ அபிராமி அம்மையின் திருவருள் பாலிக்காத பொருளில்லை. தினந்தோறும் அபிராமி அந்தாதி அன்புடன் பாராயனம் செய்யும் அடியார்கள் பலர் உளர் பாராயனம் செய்வதால் பலனைக் கண் கூடாகக் கண்டவரும் பலர் (அதில் நான், என் குடும்பத்தவரும் கூட) எனவேதான் யாவரும் அன்னையின் திருவருட் கடாட்சம் பெற்றுய்யும் வண்ணம் இந் நூலை இரண்டாவது பதிப்பாக பதிப்பித்து (இலவசமாக) வெளியிடுகிறோம்.

பக்திச் சுவை நிறைந்த சக்தி மிக்க இப் பாக்களை நாமும் பாடி நம் குழந்தைகளையும் பாடப்பணித்து அவர்களையும் நற்பயனடையச் செய்தல் வேண்டும். அன்னையின் திருவடி வடிவத்தைப் பாடல்கள் தோறும் காண்பதற்கு வாய்ப்பான இந் நூலை நாம் தூய்மையாகத் தூய்மையான சூழலிருந்து படித்தல், பாடுதல், கேட்டல், சிந்தித்தல், உணர்தல், விரும்பத்தக்கது.

அன்னையின் திருவருள் ஒவ்வொருவருக்கும் கிடைக்க வேண்டி இறைஞ்சுகிறேன் அன்னையின் திருவடியை.

நன்றி,
சாந்தி மயில்வாகணன்

'குமரன் குடில்'
6, முத்துமாரியம்மன் வீதி,
நீர்கொழும்பு.

உ

திருச்சிற்றம்பலம்

# அபிராமி அந்தாதி

காப்பு

தாரமர்கொன்றையும் சண்பகமாலையும் சாத்தும்தில்லை
ஊரர் தம்பாகத்து உமைமைந்தனே உலகு ஏழும்பெற்ற
சீரபிராமி அந்தாதிஎப் போதும்என் சிந்தையுள்ளே
காரமர் மேனிக் கணபதியே நிற்கக் கட்டுரையே.

நல்வித்தையும்ஞானமும் பெற

உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலகம் உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம் போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்கும தோயமென்ன 1
விதிக்கின்ற மேனி அபிராமி என்றன் விழுந்துணையே

தெய்வத்துணை

துணையும் தொழுந்தெய்வமும் பெற்றதாயும் சுருதிகளின்
பணையும் கொழுந்தும் பதிகொண்ட வேரும் பனிமலர்ப்பூங்
கணையும் கருப்புச் சிலையுமென் பாசாங்குசமும் கையில் 2
அணையும் திரிபுர சுந்தரியாவது அறிந்தனமே

அறிந்தேன் எவரும் அறியாமறையை அறிந்து கொண்டு
செறிந்தேன் உனது திருவடிக்கே திரு வேவெருவிப்
பிறிந்தேன் நின் அன்பர் பெருமைஎண்ணாத கருமநெஞ்சால் 3
மறிந்தே விழுநர குக்குறவாய மனிதரையே

### உயர்பதவிகள் அடைய

மனிதரும் தேவரும் மாயா முனிவரும் வந்து சென்னி
குனிதரும் சேவடிக் கோமளமே கொன்றை வார்சடைமேல்
பனிதரும் திங்களும் பாம்பும் பகீரதியும் படைத்த 4
புனிதரும் நீயும் என் புந்தி எந்நாளும் பொருந்துகவே

### மனக்கவலை தீர

பொருந்திய முப்புரை செப்புரை செய்யும் புணர் முலையால்
வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி வார்சடையோன்
அருந்திய நஞ்சு அமுதாக்கிய அம்பிகை அம்புயமேல் 5
திருந்திய சுந்தரி அந்தரி பாதம் என் சென்னியதே

### மந்திர சித்தி பெற

சென்னியது உன்பொன் திருவடித்தாமரை சிந்தையுள்ளே
மன்னியது உன்திரு மந்திரம் சிந்துர வண்ணப் பெண்ணே
முன்னிய நின் அடியாருடன் கூடி முறை முறையே 6
பன்னியது என்றும் உன் றன்பர மாகம பத்ததியே

### மலையென வரும் துன்பம் பனியென நீங்க

ததியுறு மத்திற் சுழலும்என் ஆவி தளர்விலதோர்
கதியுறு வண்ணம் கருதுகண் டாய்கம லாலயனும்
மதியுறு வேணி மகிழ்நனும் மாலும் வணங்கி என்றும் 7
துதியுறு சேவடி யாய்சிந்து ரானன சுந்தரியே

### நல்லறம் சிறக்கத் துறவறம்

சுந்தரி எந்தை துணைவி என் பாசத் தொடரை எல்லாம்
வந்தரி சிந்துர வண்ணத்தினாள் மகிடன் தலைமேல்
அந்தரி நீலி அழியாத கன்னிகை ஆரணத்தோன் 8
கந்தரி கைத்தலத் தாள் மலர்த் தாள் என் கருத்தனவே

### பேரருள் உண்டாக

கருத்தன எந்தை தன் கண்ணன் வண்ணக் கனக வெற்பிற்
பெருத்தன பால் அழும் பிள்ளைக்கு நல்கின பேரருள் கூர்
திருத்தன பாரமும் ஆரமும் செங்கைச் சிலையும் அம்பும் 9
முருத்தன மூரலும் நீயும் அம்மேவந்தென் முன்னிற்கவே

### மோட்ச சாதனம் பெற

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்பதுஉன்னை
என்றும் வணங்குவது உன்மலர்த்தாள் எழுதாமறையின்
ஒன்றும் அரும்பொருளேஅருளேஉமையேஇமயத்து 10
அன்றும் பிறந்தவளே அழியா முத்தி ஆனந்தமே

### இல்வாழ்க்கையில் இன்பம் பெற

ஆனந்தமாய்என் அறிவாய் நிறைந்த அமுதமுமாய்
வானந்தமான வடிவு உடையாள் மறைநான்கினுக்கும்
தானந்தமான சரணார விந்தம் தவளநிறக் 11
கானந்தம் ஆடரங்காம் எம்பிரான் முடிக் கண்ணியதே

### நெஞ்சம் தியானத்தில் நிலைபேறு அடைய

கண்ணியது உன்புகழ் கற்பது உன்நாமம் கசிந்து பத்தி
பண்ணியது உன்னிரு பாதாம்புயத்தில் பகல் இரவா
நண்ணியது உன்னை நயந்தோர் அவையத்து நான்முன்செய்த 12
புண்ணியம் ஏதுஎன் அம்மேபுவி ஏழையும் பூத்தவளே

### வைராக்கிய நிலை எய்த

பூத்தவளே புவனம்பதி னான்கையும் பூத்தவண்ணம்
காத்தவளே பின் கரந்தவளேகறைக் கண்டனுக்கு
மூத்தவளே என்றும் மூவா முகுந்தற்கு இளையவளே 13
மாத்தவளே உன்னை அன்றி மற்றோர் தெய்வம் வந்திப்பதே

### தலைமை பெற

வந்திப்பவர் உன்னை வானவர் தானவர் ஆனவர்கள்
சிந்திப்பவர்நல் திசைமுகர் நாரணர் சிந்தையுள்ளே
பந்திப்பவர்அழி யாப்பரமானந்தர் பாரில் உன்னைச் 14
சந்திப்பவர்க்கு எளிதாம் எம்பிராட்டியின் தண்ணளியே

### பெருஞ்செல்வமும் பேரின்பமும் பெற

தண்ணளிக் கென்றுமுன் னேபல கோடி தவங்கள் செய்வார்
மண்ணளிக் கும்செல்வமோ பெறுவார்பதி வானவர்தம்
விண்ணளிக் கும்செல்வமும் அழியா முத்திவீடுமன்றோ 15
பண்ணளிக்கும் சொல் பரிமள யாமளைப் பைங்கிளியே

### முக்காலமும் உணரும் ஆற்றல் உண்டாக

கிளியே கிளைஞர் மனத்தே கிடந்து கிளர்ந்தொளிரும்
ஒளியே ஒளிரும் ஒளிக்கிடமே எண்ணில் ஒன்றுமில்லா
வெளியே வெளிமுதல் பூதங்களாகி விரிந்த அம்மே 16
அளியேன் அறிவள விற்கு அளவான அதிசயமே

### கன்னிகைகளுக்கு நல்ல வரன் கிடைக்க

அதிசயமான வடிவுடையாள் அரவிந்தமெல்லாம்
துதிசய ஆனன சுந்தரவல்லி துணைஇரதி
பதிசய மானது அபசய மாகமுன் பார்த்தவர்தம் 17
மதிசய மாகவன்றோ வாம பாகத்தை வவ்வியதே

### பயம் நீங்க

வவ்விய பாகத்து இறைவரும் நீயும் மகிழ்ந்திருக்கும்
செவ்வியும் உங்கள் திருமணக் கோலமும் சிந்தையுள்ளே
அவ்வியம் தீர்த்தென்னை ஆண்டபொற்பாதமும் ஆகிவந்து 18
வெவ்விய காலன்என் மேல்வரும்போது வெளிநிற்கவே

### பேரின்பம் உண்டாக

வெளிநின்ற நின்திருமேனியைப் பார்த்தென் விழியும் நெஞ்சும்
களிநின்ற வெள்ளம் கரைகண்டதில்லை கருத்தினுள்ளே
தெளிநின்ற ஞானம் திகழ்கின்றதென்ன திருவுளமோ 19
ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதும் மேவி உறைபவளே

### வீடு வாசல் முதலிய செல்வங்கள் உண்டாக

உறைகின்ற நின்திருக் கோயில் நின்கேள்வர் ஒரு பக்கமோ
அறைகின்ற நான்மறையின்அடியோ முடியோ அமுதம்
நிறைகின்ற வெண்திங்களோ கஞ்சமோ என்றன் நெஞ்சகமோ 20
மறைகின்ற வாரிதியோபூரணாசல மங்கலையே

### அம்பிகைக்குச் செய்த தீமை நீங்க

மங்கலைசெங்கல சம்முலையாள்மலையாள் வருணச்
சங்கலை செங்கைச் சகல கலாமயில் தாவுகங்கை
பொங்கலை தங்கும்புரிசடையோன் புடையாள் உடையாள் 21
பிங்கலை நீலிசெய் யாள்வெளி யாள்பசும் பெண்கொடியே

### பிறவிப் பிணி தீர

கொடியே இளவஞ்சிக் கொம்பே எனக்குவம் பேபழுத்த
படியே மறையின் பரிமளமே பனிமால் இமயப்
பிடியே பிரமன் முதலாய தேவரைப் பெற்ற அம்மே 22
அடியேன் இறந்து இங்கு இனிப் பிறவாமல் வந்து
ஆண்டு கொள்ளே

### மனச்சஞ்சலம் உண்டாகாதிருக்க

கொள்ளேன் மனத்தில்நின் கோலம் அல்லாது அன்பர் கூட்டந்
விள்ளேன் பரசமயம் விரும்பேன் வியன் மூவுலகுக்கு (தன்னை
உள்ளே அனைத்தினுக் கும்புறம் பேஉள்ளத் தேவிளைந்த 23
கள்ளே களிக்கும் களியே அளிய என் கண்மணியே

### தீராத நோய் தீர

மணியே மணியின் ஒளியே ஒளிரும் மணிபுனைந்த
அணியே அணியும் அணிக்கழகே அணுகாதவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே அமரர் பெருவிருந்தே 24
பணியேன் ஒருவரை நின் பத்ம பாதம் பணிந்த பின்னே

### நினைத்த காரியம் இடையூறின்றி ஈடேற

பின்னே திரிந்து உன் அடியாரைப் பேணிப் பிறப்பறுக்க
முன்னே தவங்கள் முயன்று கொண்டேன் முதல் மூவருக்கும்
அன்னே உலகுக்(கு) அபிராமி என்னும் அருமருந்தே 25
என்னே இனி உன்னை யான் மறவாமல் நின்(று) ஏத்துவனே

### சொல்வன்மையும் செல்வாக்கும் பெருக

ஏத்தும் அடியவர் ஈரே ழுலகினையும் படைத்தும்
காத்தும் அழித்தும் திரிபவராம் கமழ் பூங்கடம்பு 26
சாத்தும் குழல் அணங்கே மணம் நாறும்நின் தாள் இணைக்கென்
நாத்தங்கு புன்மொழி ஏறியவாறு நகையுடைத்தே

### அருட்புனல் பரவ

உடைத்தனை வஞ்சப் பிறவியை உள்ளம் உருகும் அன்பு
படைத்தனை பத்ம பதயுகம் சூடும் பணி எனக்கே
அடைத்தனை நெஞ்சத்து அழுக்கை எல்லாம் நின் அருட்புனலால்
துடைத்தனைசுந்தரி நின்னருள் ஏதென்று சொல்லுவதே 27

### இகபர சுகங்களைப் பெற

சொல்லும் பொருளும் என நடமாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடியே நின்புது மலர்த்தாள்
அல்லும் பகலும் தொழும் அவர்க்கே அழியா அரசும் 28
செல்லும் தவநெறியும்சிவ லோகமும் சித்திக்குமே

### அணிமாதி சித்திகளைப் பெற

சித்தியும் சித்தி தருந் தெய்வமாகித் திகழும்பரா
சத்தியும் சத்தி தழைக்கும் சிவமும் தவம்முயல்வார்
முத்தியும் முத்திக்கு வித்தும் வித்தாகி முளைத்தெழுந்த 29
புத்தியும் புத்தியின் உள்ளே புரக்கும் புரத்தையன்றே

### அடுத்தடுத்துவரும் துன்பம் நீங்க

அன்றே தடுத்தென்னை ஆண்டுகொண்டாய் கொண்டது
அல்லவென்கை
நன்றே உனக்கு இனி நான்என் செயினும் நடுக்கடலுள்
சென்றே விழினும் கரையேற்றுகைநின் திருவுளமே 30
ஒன்றே பலவுருவேயருவே என் உமையவளே

### மறுமையில் இன்பம் உண்டாக

உமையும் உமையொரு பாகனும் ஏக உருவில் வந்திங்கு
எமையும் தமக்கன்பு செய்யவைத்தார்இனி எண்ணுதற்குச்
சமயங்களுமில்லை ஈன்றெடுப்பாள் ஒரு தாயும் இல்லை 31
அமையும் அமையுறு தோளியர் மேல்வைத்த ஆசையுமே

### ஆட்கொள்ள

ஆசைக் கடலில் அகப்பட்டு அருளற்ற அந்தகன்கைப்
பாசத்தில் அல்லல் பட இருந்தேனை நின் பாதம் என்னும்
வாசக் கமலம் தலைமேல் வலியவைத்து ஆண்டுகொண்ட 32
நேசத்தை என் சொல்லுவேன் ஈசர் பாகத்து நேரிழையே

### அம்பிகையின் நினைவு அகலாதிருக்க

இழைக்கும் வினைவழியே அடும் காலன் எனை நடுங்க
அழைக்கும் பொழுது வந்து அஞ்சல் என்பாய் அத்தர் சித்தர்
எல்லாம்
குழைக்கும் களபக் குவிமுலை யாமளைக் கோமளமே 33
உழைக்கும் பொழுது உன்னையே அன்னையே என்பன் ஓடிவந்தே

### அடியாருக்கு வேண்டுவன பெற

வந்தே சரணம் புகும்அடி யாருக்கும் வான் உலகம்
தந்தே பரிவொடு தான்போய் இருக்கும் சதுர்முகமும்
பைந்தேன் அலங்கல் பருமணி ஆகமும் பாகமும்பொன் 34
செந்தேன் மலரும் அலர்கதிர் ஞாயிறும் திங்களுமே

### கடி மணம் நிகழ

திங்கட் பகவின் மணம்நாறும் சீறடி சென்னிவைக்க
எங்கட்கு ஒருதவம் எய்திய வாஎண் ணிறந்த விண்ணோர்
தங்கட்கும் இந்தத் தவமெய்துமோ தரங்கக்கடலுள் 35
வெங்கட் பணியணை மேல்துயில் கூரும் விழுப்பொருளே

### தொல்வினைகள் போக

பொருளே பொருள்முடிக் கும்போக மேஅரும் போகம் செய்யும்
மருளே மருளில் வருந்தெருளேஎன் மனத்து வஞ்சத்து
இருளேதும் இன்றி ஒளிவெளியாகி இருக்கும் உன்றன் 36
அருளேது அறிகின்றிலேன் அம்புயாதனத்து அம்பிகையே

### நவரத்தினம் அடையும் நல்லூழ் பெற

கைக்கே அணிவது கன்னலும் பூவும் சுமலம் அன்ன
மெய்க்கே அணிவது வெண்முத்துமாலை விடஅரவின்
பைக்கே அணிவது பன்மணிக்கோவையும் பட்டும் எட்டுத் 37
திக்கே அணியும் திருவுடையான் இடம் சேர்பவளே

### வேண்டிய பொருளை வேண்டிய படியே அடைய

பவளக்கொடியில் பழுத்த செவ்வாயும் பனிமுறுவல்
தவளத் திருநகை யும்துணை யாஎங்கள் சங்கரனைத்
துவளப் பொருது துடியிடை சாய்க்கும் துணைமுலையாள் 38
அவளைப் பணிமின்கண் டீர் அமராவதி ஆளுகைக்கே

### தேர்ச்சி பெற

ஆளுகைக்கு உன்றன் அடிதாமரைகள் உண்டு அந்தகன்பால்
மீளுகைக்கு உன்றன் விழியின் கடையுண்டு மேல் இவற்றின்
மூளுகைக்கு என்குறை நின்குறையே அன்று முப்புரங்கள்
மாளுகைக்கு அம்பு தொடுத்த வில்லான் பங்கில் வாள் நுதலே 39

### பூர்வ புண்ணியம் தடையின்றிப் பயன்தர

வாணுதல் கண்ணியை விண்ணவர் யாவரும் வந்திரைஞ்சிப்
பேணுதற்கு எண்ணிய எம்பெருமாட்டியைப் பேதை நெஞ்சில்
காணுதற்கு அண்ணியள் அல்லாத கன்னியைக் காணும் அன்பு 40
பூணுதற்கு எண்ணிய எண்ணம் அன்றோ? முன் செய் புண்ணியமே

### அடியார் உறவு பெற

புண்ணியம் செய்தனமே மனமே புதுப் பூங்குவளைக்
கண்ணியம் செய்ய கணவரும் கூடி நம் காரணத்தால்
நண்ணிஇங் கேவந்து தம்மடியார்கள் நடுவிருக்கப் 41
பண்ணிநம் சென்னியின் மேல் பத்மபாதம் பதித்திடவே

### உலகம் நமக்கு உதவ

இடங்கொண்டு விம்மி இணைகொண்டு இறுதி இளகிமுத்து
வடங்கொண்ட கொங்கை மலைகொண்டு இறைவர் -
- வலியநெஞ்சை
நடங்கொண்ட கொள்கை நலங்கொண்ட நாயகி நல்லரவின் 42
படங்கொண்ட அல்குல் பனிமொழி வேதப் பரிபுரையே

### தீமையெல்லாம் நீங்க

பரிபுரச் சீறடி பாசாங்குசை பஞ்ச பாணி இன்சொல்
திரிபுர சுந்தரி சிந்துரமேனியள் தீமை நெஞ்சில்
புரிபுர வஞ்சரை அஞ்சக் குனிபொருப் புச்சிலைக்கை 43
எரிபுரை மேனி இறைவர் செம்பாகத்து இருந்தவளே

தவளே இவள் எங்கள் சங்கரனார்மனை மங்கலமாம்
அவளே அவர் தமக்கு அன்னையும் ஆயினள் ஆகையினால்
இவளே கடவுளர் யாவர்க்கும் மேலை இறைவியுமாம் 44
துவளேன் இனியொரு தெய்வமுண் டாகமெய்த் தொண்டு -
- செய்தே

### உலக அபவாதம் நீங்க

தொண்டுசெய் யாதுநின் பாதம்தொழாது துணிந்திச்சையே
பண்டுசெய் தார்உள ரோஇல ரோஅப் பரிசடியேன்
கண்டுசெய் தால்அது கைதவமோ அன்றிச் செய்தவமோ 45
மிண்டு செய்தாலும் பொறுக்கை நன் றேபின் வெறுக்கையன்றே

வெறுக்கும் தகைமைகள் செய்யினும் தம்மடியாரை மிக்கோர்
பொறுக்கும் தகைமை புதியதன்றே புது நஞ்சையுண்டு
கறுக்கும் திருமிடற்றான் இடப்பாகம் கலந்த பொன்னே 46
மறுக்கும் தகைமைகள் செய்யினும் யான் உன்னை வாழ்த்துவனே

### யோக சித்திபெற

வாழும்படியொன்று கண்டுகொண்டேன் மனத்தேயொருவர்
வீழும் படியன்று விள்ளும் படியன்று வேலைநிலம்
ஏழும் பருவரை எட்டும் எட்டாமல் இரவு பகல் 47
சூழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே

சுடரும் கலைமதி துன்றும் சடைமுடிக் குன்றில் ஒன்றிப்
படரும் பரிமளப் பச்சைக் கொடியைப் பதித்து நெஞ்சில்
இடரும் தவிர்த்திமைப் போதிருப்பார் பின்னும் எய்துவரோ 48
குடரும் கொழுவும் குருதியும் தோயும் குரம்பையிலே

குரம்பை அடுத்துக் குடிபுக்க ஆவிவெங் கூற்றுக்கிட்ட
வரம்பை அடுத்து மறுகும்அப் போது வளைக்கை அமைத்(து)
அரம்பை அடுத்த அரிவையர் சூழவந்து அஞ்சல் என்பாய் 49
நரம்பை அடுத்த இசைவடி வாய்நின்ற நாயகியே

### அம்பிகையை நேரில் தரிசிக்க

நாயகி நான்முகி நாரா யணிகை நளின பஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வாராகி சூலினி மாதங்கி என்று 50
ஆயகி யாதி உடையாள் சரணம் அரண் நமக்கே

### வையக வாழ்வில் சிறக்க

அரணம் பொருள் என்று அருள்ஒன் றிலாத அசுரர்தங்கள்
முரண் அன்று அழிய முனிந்த பெம்மானும் முகுந்தனுமே
சரணம் சரணம் என நின்ற நாயகி தன்னடியார் 51
மரணம் பிறவி இரண்டும்எய் தார்இந்த வையகத்தே

### இம்மையில் பெருஞ்செல்வம் உண்டாக

வையம் துரகம் மதகரி மாமகு டம்சிவிகை
பெய்யும் கனகம் பெருவிலை ஆரம் பிறைமுடித்த
ஐயன் திருமனை யாள்அடித் தாமரைக்கு அன்பு முன்பு 52
செய்யும் தவம்உடை யார்க்குள வாகிய சின்னங்களே

### தவம் சிறக்க

சின்னஞ் சிறிய மருங்கினில் சாத்திய செய்யபட்டும்
பென்னம் பெரிய முலையும்முத் தாரமும் பிச்சி மொய்த்த
கன்னங் கரிய குழலும்கண் மூன்றும் கருத்தில் வைத்துத் 53
தன்னந்தனியிருப் பார்க்கிது போலும் தவமில்லையே

### கடன் தொல்லைகள் தீர

இல்லாமை சொல்லி ஒருவர் தம்பால்சென்று இழிவுபட்டு
நில்லாமை நெஞ்சில் நினைகுவி ரேல் நித்தம் நீடுதவம்
கல்லாமை கற்ற கயவர்தம் பால்ஒரு காலத்திலும் 54
செல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே

### விருப்பு வெறுப்பற்ற மோனநிலை எய்த

மின்னாயிரம்ஒரு மெய்வடி வாகி விளங்குகின்ற
தன்னாள் அகமகிழ் ஆனந்த வல்லி அருமறைக்கு
முன்னாய் நடுவெங்கு மாய்முடி வாய முதல்விதன்னை 55
உன்னாது ஒழியினும் உன்னினும் வேண்டுவதொன்றில்லையே

### யாவரையும் ஈர்க்கும் ஆற்றல் உண்டாக

ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்து இவ் வுலகெங்குமாய்
நின்றாள் அனைத்தையும் நீங்கி நிற்பாள் என்றன் நெஞ்சினுள்ளே
பொன்றாது நின்று புரிகின்றவா இப் பொருள் அறிவார் 56
அன்றா லிலையில் துயின்ற பெம்மானும் என் ஐயனுமே

### வறுமை நிலை ஒழிய

ஐயன் அளந்த படியிரு நாழிகொண்டு அண்டம்எல்லாம்
உய்ய அறம்செயும் உன்னையும் போற்றி ஒருவர் தம்பால்
செய்ய பசுந்தமிழ்ப் பாமாலையுங் கொண்டு சென்று பொய்யும் 57
மெய்யும் இயம்பவைத்தாய் இதுவோ உன்றன் மெய்யருளே

### இறையுணர்வால் மன அமைதி பெற

அருணும் புயத்தும்என் சித்தாம் புயத்தும் அமர்ந்திருக்கும்
தருணம் புயமுலைத் தையல்நல் லாள்தகை சேர்நயனக்
கருணம் புயமும் வதனமும் புயமும் கராம்புயமும் 53
சரணம் புயமும் அல்லாற்கண்டிலேன் ஒரு தஞ்சமுமே

### பிள்ளை நல்லவனாக

தஞ்சம் பிறிதில்லை ஈதல்ல தென்றுன் தவநெறிக்கே
நெஞ்சம் பயில நினைக்கின்றிலேன் ஒற்றை நீள் சிலையும்
அஞ்சம்பும் இக்கு அலர் ஆகநின்றாய் அறியார் எனினும் 59
பஞ்சஞ்சும் மெல்லடியார் அடியார் பெற்ற பாலரையே

### மெய்யுணர்வு தோன்ற

பாலினும் சொல்இனி யாய்பனி மாமலர்ப் பாதம்வைக்க
மாலினும் தேவர் வணங்க நின்றோன் கொன்றை வார்சடையின்
மேலினும் கீழ்நின்று வேதங்கள் பாடும் பெய்ப் பீடம்ஒரு 60
நாலனும் சாலநன்றோ அடியேன் முடை நாய்த்தலையே

### மாயை அகன்று உண்மை உணர்வு உண்டாக

நாயேனையும் இங்கு ஒருபொருளாக நயந்து வந்து
நீயே நினைவின்றி ஆண்டுகொண்டாய் நின்னை உள்ள வண்ணம்
பேயேன் அறியும் அறிவுதந்தாய் என்ன பேறுபெற்றேன் 61
தாயே மலைமகளே செங்கண் மால்திருத் தங்கைச்சியே

### எத்தகைய அச்சமும் அகல

தங்கச்சிலை கொண்டு தானவர் முப்புரம் சாய்த்துமத
வெங்கண் கரியுரி போர்த்த செஞ்சேவகன் மெய்யடையக்
கொங்கைக் குரும்பைக் குறியிட்ட நாயகி கோகனகச் 62
செங்கைக் கரும்பும் அலரும்எப் போதும்என் சிந்தையதே

### நல்லறிவு உண்டாக

தேறும்படிசில ஏதுவும் காட்டிமுன் செல்கதிக்குக்
கூறும் பொருள் குன்றில் கொட்டும் தறிகுறிக் கும்சமயம்
ஆறும் தலைவி இவளாய் இருப்பது அறிந்திருந்தும் 63
வேறும் சமயம் உண்டென்று கொண்டாடிய வீணருக்கே

### பக்தி பெருக

வீணே பலிகவர் தெய்வங்கள் பாற்சென்று மிக்க அன்பு
பூணேன் உனக்கு அன்பு பூண்டு கொண்டேன்நின் புகழ்ச்சியன்றிப்
பேணேன் ஒருபொழுதும் திருமேனிப் ரகாசமன்றிக் 64
காணேன் இரு நில மும்திசை நான்கும் ககனமுமே

### மகப்பேறு உண்டாக

ககனமும் வானும் புவனமும் காண விற் கர்மன் அங்கம்
தகனமுன் செய்த தவப்பெரு மாற்குத் தடக்கையும் செம்
முகனுமந் நான்கிரு மூன்றெனத் தோன்றிய மூதறிவின் 65
மகனுமுண் டாயதன் றோவல்லி நீசெய்த வல்லபமே

### கவிபாடும் ஆற்றல் பெற

வல்லபம் ஒன்றறி யேன்சிறி யேன்நின் மலரடிச் செம்
பல்லவம் அல்லது பற்றொன் றிலேன்பசும் பொற்பொருப்பு
வில்லவர் தம்முடன் வீற்றிருப் பாய்வினை யேன் தொடுத்த 66
சொல்லவ மாயினும் நின்திரு நாமங்கள் தோத்திரமே

தோத்திரம் செய்து தொழுதுமின் போலும்நின் தோற்றம் ஒரு
மாத்திரைப் போதும் மனத்தில்வை யாதவர் வண்மை குலம்
கோத்திரம் கல்வி குணம்குன்றி நாளும் குடில்கள் தொறும் 67
பாத்திரம் கொண்டு பலிக்குழ லாநிற்பர் பாரெங்குமே

### நிலம் வீடு போன்ற செல்வங்கள் பெருக

பாரும் புனலும் கனலும்வெங் காலும் படர்விசும்பும்
ஊரும் முருகு சுவை ஒளி ஊறொலி ஒன்றுபடச்
சேரும் தலைவி சிவகாம சுந்தரி சீரடிக்கே 68
சாரும் தவமுடையார்படை யாத தனமில்லையே

### சகல சௌபாக்கியங்களும் உண்டா

தனந்தரும் கல்வி தரும்ஒரு நாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவுந் தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே 69
கனந்தரும் பூங்குழ லாள் அபிராமி கடைக்கண்களே

### இசை, ஓவியம் முதலிய கலைகளின் வல்லமை பெற

கண்களிக் கும்படி கண்டு கொண்டேன் கடம் பாடவியில்
பண்களிக் கும்குரல் வீணையும் கையும் பயோதரமும்
மண்களிக் கும்பச்சை வண்ணமும் ஆகி மதங்கர்குலப்
பெண்களிற் றோன்றிய எம்பெருமாட்டி தன் பேரழகே 70

### மனக்குறை தீர்ந்து மகிழ்ச்சி பெருக

அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லி அருமறைகள்
பழகிச் சிவந்த பதாம்புயத்தாள் பனிமாமதியின்
குழவித் திருமுடிக் கோமள யாமளைக் கொம்பிருக்க
இழவுற்று நின்ற நெஞ் சேயிரங் கேல். உனக்கு என் குறையே 71

### பிறவிப்பிணி தீர

என் குறை தீர நின்று ஏத்துகின் றேன்இனி யான் பிறக்கின்
நின்குறையே அன்றி யார்குறைகாண் இரு நீள்விசும்பின்
மின் குறை காட்டி மெலிகின்ற நேரிடை மெல்லியலாய்
தன் குறை தீரஎங் கோன்சடை மேல்வைத்த தாமரையே 72

### பெண்களுக்குக் கர்ப்பம் உண்டாக

தாமம் கடம்பு படை பஞ்சபாணம் தனுக்கரும்பு
யாமம் வயிரவர் ஏத்தும் பொழுது எமக் கென்றுவைத்த
சேமம் திருவடி செங்கைகள் நான்கு ஒளி செம்மையம்மை
நாமம் திரிபுரை ஒன்றோ டிரண்டு நயனங்களே 73

### செய் தொழிலில் தலைமை எய்த

நயனங்கள் மூன்றுடை நாதனும் வேதமும் நாரணனும்
அயனும் பரவும் அபிராமவல்லி அடியிணையைப்
பயன் என்று கொண்டவர் பாவையர் ஆடவும் பாடவும் பொன்
சயனம் பொருந்து தமனியக் காவினில் தங்குவரே 74

### விதியையும் வெல்ல

தங்குவர் கற்பகத் தருவின் நீழலில் தாயரின்றி
மங்குவர் மண்ணில் வழுவாப் பிறவியை மால்வரையும்
பொங்குவர் அழியும் ஈரேழ் புவனமும் பூத்த உந்திக்
கொங்கிவர் பூங்குழ லாள் திருமேனி குறித்தவரே 75

### தனக்குரிய பொருள் தப்பாமல் வந்துசேர

குறித்தேன் மனத்தில்நின் கோலம்எல் லாம்நின் குறிப்பறிந்து
மறித்தேன் மறலி வருகின்ற நேர்வழி வண்டுகிண்டி
வெறித்தேன் அவிழ்கொன் றைவேணிப்பிரான் ஒருகூற்றை மெய்யில்
பறித்தே குடிபுகு தும்பஞ்ச பாண பயிரவியே 76

### பகைவர்களால் உண்டாகும் அச்சம் நீங்க

பயிரவி பஞ்சமி பாசாங் குசைபஞ்ச பாணிவஞ்சர்
உயிரவி உண்ணும் உயர்சண்டி காளி ஒளிரும்கலா
வயிரவி மண்டலி மாலினி சூலி வராகி என்றே
செயிரவி நான்மறை சேர்திரு நாமங்கள் செப்புவரே 77

### சகல போக செளபாக்கியங்கள் உண்டாக

செப்பும் கனக கலசமும் போலும் திருமுலைமேல்
அப்பும் களப அபிராமவல்லி அணிதரளக்
கொப்பும் வயிரக் குழையும் விழியின் கொழுங்கடையும்
துப்பும் நிலவும் எழுதிவைத் தேன் என் துணைவிழிக்கே 78

விழிக்கே அருளுண்டு அபிராம வல்லிக்கு வேதம் சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண்டு எமக்கு அவ்வழிகிடக்கப்
பழிக்கே சுழன்றுவெம் பாவங்க ளேசெய்து பாழ்நரகக்
குழிக்கே அழுந்தும் கயவர்தம் மோடென்ன கூட்டினியே 79

### நிலையான மன மகிழ்ச்சி உண்டாக

கூட்டியவா என்னைத் தன்னடியாரில் கொடியவினை
ஓட்டியவா என்கண் ஓடியவா தன்னை உள்ள வண்ணம்
காட்டியவா கண்ட கண்ணும் மனமும் களிக்கின்றவா
ஆட்டிய வாநடம் ஆடகத் தாமரை ஆரணங்கே 80

### நன்னடத்தை உண்டாக

அணங்கே அணங்குகள் நின் பரிவாரங்கள் ஆகையினால்
வணங்கேன் ஒருவரை வாழ்த்துகி லேன் நெஞ்சில் வஞ்சகரோடு
இணங்கேன் எனது உனது என்றிருப்பார் சிலர் யாவரொடும்
பிணங்கேன் அறிவொன் றிலேன் என் கண் நீ வைத்தபேரளியே 81

### கவன சக்தி பெருத

அளியார் கமலத்தில் ஆரணங்கே அகிலாண்டமும் நின்
ஒளியாக நின்ற ஒளிர்திரு மேனியை உள்ளுந்தொறும்
களியாகி அந்தக் கரணங்கள் விம்மிக் கரைபுரண்டு
வெளியாய் விடின் எங்ஙனேமறப் பேன்நின் விரகினையே 82

### ஏவலர் பலர் உளராக

விரவும் புதுமலர் இட்டுநின் பாத விரைக்கமலம்
இரவும் பகலும் இறைஞ்சவல் லார்இமை யோர்எவரும்
பரவும் பதமும் அயிராவதமும் பகீரதியும்
உரவும் குலிசமும் கற்பகக் காவும் உடையவரே 83

### இக்கட்டான நிலைகள் நீங்க

உடையாளை ஒல்கு செம்பட்டு உடையாளை ஒளிர்மதிசெஞ்
சடையாளை வஞ்சகர் நெஞ்சடை யாளைத் தயங்கு நுண்ணூல்
இடையாளை எங்கள்பெம் மானிடையாளை இங்கு என்னை இனிப்
படையாளை உங்களை யும்படை யாவண்ணம் பார்த்திருமே 84

### அல்லல் எல்லாம் அற

பார்க்கும் திசைதொறும் பாசாங்குசமும் பனிச்சிறைவண்டு
ஆர்க்கும் புதுமலர் ஐந்தும் கரும்பும்என் அல்லல் எல்லாம்
தீர்க்கும் திரிபுரை யாள்திரு மேனியும் சிற்றிடையும்
வார்க்குங் குமமுலையும் முலைமேல் முத்து மாலையுமே 85

### அச்சம் நீங்க

மாலயன் தேட மறைதேட வானவர் தேடநின்ற
காலையும் சூடகக் கையையும் கொண்டு கதித்தகப்பு
வேலைவெங் காலன் என் மேல்விடும் போது வெளிநில் கண்டாய்
பாலையும் தேனையும் பாகையும் போலும் பணிமொழியே 86

### செயற்கரிய செயல்களைக் செய்து புகழ்பெற

மொழிக்கும் நினைவுக்கும் எட்டாத நின்திரு மூர்த்தி என்றன்
விழிக்கும் வினைக்கும் வெளி நின்ற தால்விழி யால் மதனை
அழிக்கும் தலைவர் அழியா விரதத்தை அண்டமெல்லாம்
பழிக்கும் படியொழி பாகம் கொண்டாளும் பராபரையே 87

### அம்பிகையின் அருள் எப்போதும் கிடைக்க

பரமென்று உனை அடைந்தேன் தமியேனும் உன் பத்தருக்குள்
தரமென்று இவன் என்று தள்ளத்தகாது தரியவர் தம்
புரமன்று எரியப் பொருப்புவில் வாங்கிய போதில் அயன்
சிரம் ஒன்று செற்றகை யான் இடப் பாகம் சிறந்தவளே 88

### யோக சித்தி பெற

சிறக்கும் கமலத் திருவே நின் சேவடி சென்னிவைக்கத்
துறக்கம் தரும்நின் துணைவரும் நீயும் துரியம் அற்ற
உறக்கம் தரவந்து உடம்போடு உயிர் உற வற்றறிவு 86
மறக்கும் பொழுதென்முன் னேவரல் வேண்டும் வருந்தியுமே

### தம்பதிகள் மனம் ஒன்றி மகிழ்ந்திட

வருந்தா வகைஎன் மனத்தா மரையினில் வந்துபுகுந்து
இருந்தாள் பழைய இருப்பிடமாக இனிஎனக்குப்
பொருந்தா தொருபொருள் இல்லைவிண் மேவும்புலவருக்கு 90
விருந்தாக வேலை மருந்தா னதைநல்கும் மெல்லியளே

### அரசாங்க காரியங்களில் வெற்றி உண்டாக

மெல்லிய நுண்ணிடை மின் அனை யாளை விரிசடையோன்
புல்லிய மென்முலை பொன்அனை யாளைப் புகழ்ந்துமறை
சொல்லிய வண்ணம் தொழும் அடியாரைத் தொழுவர்க்குப்
பல்லியம் ஆர்த்தெழ வெண்பக(டு) ஊரும் பதம் தருமே 91

### மனப்பக்குவம் உண்டாக

பதத்தே உருகிநின் பாதத்தி லேமனம் பற்றி உன்றன்
இதத்தே ஒழுக அடிமைகொண் டாய்இனி யான்ஒருவர்
மதத்தே மதிமயங் கேன் அவர்போன வழியும் செல்லேன்
முதத் தேவர் மூவரும் யாவரும் போற்றும் முகிழ்நகையே 92

### உள்ளத்தே உண்மை ஒளி உண்டாக

நகையே இஃதிந்த ஞாலமெல் லாம்பெற்ற நாயகிக்கு
முகையே முகிழ்முலை மானே முதுகண் முடிவில் அந்த
வகையே பிறவியும் வம்பே மலைமகள் என்பது நாம்
மிகையே இவள்தன் தகைமையை நாடி விரும்புவதே 93

### விரும்பித் தொழுது உயர

விருப்பித் தொழும்அடி யார்விழி நீர்மல்கி மெய்புளகம்
அரும்பித் ததும்பிய ஆனந்த மாகி அறிவிழந்து
சுரும்பிற் களித்து மொழிதடு மாறிமுன் சொன்ன எல்லாம்
தரும்பித்தர் ஆவரென் றால்அபி ராமி சமயம் நன்றே 94

### தூய மனநிலை பெற

நன்றே வருகினும் தீதே விளைகினும் நான் அறிவது
ஒன்றேயு மில்லை உனக்கே பரம்எனக்கு உள்ளவெல்லாம்
அன்றே உன தன்று அளித்துவிட் டேன்அழி யாதகுணக்
குன்றே அருட்கடலே இமவான் பெற்ற கோமளமே 95

### எங்கும் தலைமையும் புகழும் பெற

கோமள வல்லியை அல்லியந் தாமரைக் கோயில் வைகும்
யாமள வல்லியை ஏதம் இலாளை எழுதரிய
சாமள மேனிச் சகலக லாமயில் தன்னைத்தம்மால்
ஆமள வும்தொழு வார்எழு பாருக்கும் ஆதிபரே 96

### புகழும் தர்மமும் வளர

ஆதித்தன் அம்புலி அங்கி குபேரன் அமரர் தங்கோன்
போதிற் பிரமன் புராரி முராரி பொதிமுனி
காதிப் பொருபடைக் கந்தன் கணபதி காமன் முதல்
சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர் தையலையே 97

### வஞ்சகர் செயலால் வருத்தம் உண்டாகாதிருக்க

தைவந்து நின்னடித் தாமரை சூடிய சங்கரற்குக்
கைவந்த தீயும் தலைவந்தஆறும் கரந்ததெங்கே
மெய்வந்த நெஞ்சின் அல் லால்ஒரு காலும் விரகர் தங்கள்
பொய்வந்த நெஞ்சில் புகஅறி யாமடப் பூங்குயிலே 98

### அருள் தன்மை வளர

குயிலாய் இருக்கும் கடம்பா டவியிடைக் கோலஇயல்
மயிலாய் இருக்கும் இமயா சலத்திடை வந்துதித்த
வெயிலாய் இருக்கும் விசும்பில் கமலத்தின் மீதன்னமாம்
கயிலாயருக்கு அன்று இமவான் அளித்த கனங்குழையே 99

அம்பிகையின் திருவுருவை மனத்தில் எப்போதும் காண

குழையத் தழுவிய கொன்றையந் தார்கமழ் கொங்கைவல்லி
கழையைப் பொருத திருநெடுந் தோளும் கரும்புவில்லும்
விழையப் பொருதிறல் வேரியம் பாணமும் வெண்ணகையும் 100
உழையைப் பொருகண்ணும் நெஞ்சில் எப்போதும் உதிக்கின்றவே

## நூற் பயன்

ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை அண்டம் எல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத் தாளைப் புவியடங்கக்
காத்தாளை ஐங்கணை பாசாங்குசமும் கரும்பும் அங்கை
சேர்த்தாளை முக்கண்ணியைத்தொழு வார்க்குஒரு தீங்கில்லையே

## அபிராமி அம்மைப் பதிகம்

கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர் கபடுவாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும் கழுபிணியிலாத உடலும்
சலியாத மனமும் அன்பு அகலாத மனைவியும் தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும் தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலும் ஒரு துன்பமில்லாத வாழ்வும்
துய்யநின் பாதத்தில் அன்பும் உதவிப்பெரிய தொண்டரொடு கூட்டுகண்டாய்
அலையாழி அறிதுயிலு மாயனது தங்கையே ஆதி கடவூரின் வாழ்வே
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி அருள்வாமி அபிராமியே.

திருச்சிற்றம்பலம்

௨

ஓம் ஜெய துர்க்காயை நம

# ஸ்ரீ துர்க்காதேவி அஷ்டகம்

(பண் : நாதநாமக்கிரியை)

பகவதி தேவி பர்வத தேவி
பல மிகு தேவி துர்க் கையளே
ஜெகமது யாவும் ஜெயஜெய வெனவே
சங்கரியுன்னைப் பாடி டுமே
ஹநஹந தகதக பசபச வெனவே
தளிர்த் திடுஜோதி யான வளே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா!

தண்டினி தேவி தக்ஷிணி தேவி
கட்கினி தேவி துர்க் கையளே
தந்தன தான தன தன தான
தாண்டவ நடன ஈஸ்வ ரியே
முண்டினி தேவி முன்னொளி சூலி
முனிவர்கள் தேவி மணித் தீவி
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா!

காளனி நீயே காமினி நீயே
கார்த்திகை நீயே துர்க் கையளே
நீலினி நீயே நீதினி நீயே
நிர்நிதி நீயே நீர் ஒளியே
மாலினி நீயே மாதினி நீயே
மாதவி நீயே மான் விழியே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா!

நாரணி மாயே நான்முகன் தாயே
நாகினி யாயே துர்க் கையளே
ஊரணி மாயே ஊற்று தாயே
ஊர்த்துவ யாயே ஊர் ஒளியே
காரணி மாயே காருணி தாயே
கானக யாயே காசி னியே
ரோசநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா!

திருமக ளாய் கலைமக ளாய்
மலைமக ளாய் துர்க் கையளே
பெருநிதி யாய் பேரறி வாய்
பெருவலி யாய் பெண் மையவளே
நறுமல ராய் நல்லவ ளாய்
நந்தினி யாய் நங்கை யளே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெயதுர்க்கா!

வேதமும் நீயே வேதியள் நீயே
வேகமும் நீயே துர்க் கையளே
நாதமும் நீயே நாற்றிசை நீயே!
நாணமும் நீயே நாய கியே
மாதமும் நீயே மாதவம் நீயே
மானமும் நீயே மாய வளே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா!

கோவுறை ஜோதி கோமள ஜோதி
கோமதி ஜோதி துர்க்கை யளே
நாவுறை ஜோதி நாற்றிசை ஜோதி
நாட்டிய ஜோதி நாச்சியளே
பூவுறை ஜோதி பூரண ஜோதி
பூதநற் ஜோதி பூரணியே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெயதுர்க்கா!

ஜெயஜெய சைல புத்திரிப் ப்ரஹ்ம
சாரணி சந்த்ர கண்டி னியே
ஜெயஜெய கூஷ் மாண்டினி ஸ்கந்த
மாதினி காத்யா யன்ய யளே
ஜெயஜெய கால ராத்திரி கௌரி
ஸித்திதா ஸ்ரீநவ துர்க் கையளே
ரோகநி வாரணி சோகநிவாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா!

பலன் வழி

செவ்வாய், வியாழன், அஷ்டமி ஆகிய தினங்களில் காலை யில் படிக்க நற்பலன் விளையும். நோய்கள் தீர அன்றுடம் ஐந்து தடவையும் குடும்பத் துன்பங்கள் தீர காலையிலும், மாலையிலும் மாக எண்பத்தொரு நாட்கள் தொடர்ந்து படித்துவர அன்னை அருள் கூடும். கோவில்களில் விளங்கும் ஸ்ரீ துர்க்கா சன்னதியில் ராகு காலத்தில் பாடிவரின் கிரக பீடையும், துன்பமும் தீரும். செவ்வாய்க்கிழமை தீபத்தின் முன்பு ஆசாரசீலராயிருந்து படிக் கும் கன்னிகைளுக்கு விவாகப் பிராப்தியும் ஏற்படும்.

ஜெயதுர்க்கா

''துர்க்கைச் சித்தர்''

உ

## உமாதேவியார்

# தமிழ் அர்ச்சனை மலர்

### திருச்சிற்றம்பலம்

உலகுயிர் காக்கும் உத்தமி போற்றி
அருந்தவர்க் கருளும் ஆரணி போற்றி
நான்மறை போற்றும் நாயகி போற்றி
சாமள மேனிச் சங்கரி போற்றி
கற்றவர் விழுங்கும் கபாலி போற்றி
மூவாச் சாவா முதல்வி போற்றி
நாகம் சூடந்த நாயகி போற்றி
புவனே சுவரி பூரணி போற்றி
வெள்வளை பூண்ட வித்தகி போற்றி
போகம் ஆர்த்த பூங்கொடி போற்றி
பச்சை வண்ணப் பார்வதி போற்றி
ஞான சக்தி நாயகி போற்றி
பக்தர் போற்றும் பகவதி போற்றி
சங்கரன் இடத்தமர் சங்கரி போற்றி
நாற்பயன் நல்கும் நாரணி போற்றி
பச்சிளங் கொடியிடைப் பகவதி போற்றி
நீல மேனி நின்மலி போற்றி
வைரக் குழமுடை வயிரவி போற்றி
சண்டி என்னும் சாம்பவி போற்றி
கவுணியர்க் கருள்சிவகாமி போற்றி
ஐங்கணைக் கருப்படை ஆரணி போற்றி
குபேரனுக் கருளும் கோமதி போற்றி
வினையினைக் களையும் வித்தகி போற்றி
துரியங் கடந்த சுந்தரி போற்றி
சண்ட முண்ட சங்காரி போற்றி
கந்தனைப் பயந்த காரணி போற்றி
நவத்த திக்கருள் நாயகி போற்றி

பஞ்ச பாணிப் பைரவி போற்றி
வியாசருக் கருளும் வித்தகி போற்றி
மரகத வல்லி மண்டலி போற்றி

நட்டம் நயந்த நாயகி போற்றி
விண்ணோர் போற்றும் விமலி போற்றி
பலநோய் தீர்க்கும் பராபரி போற்றி
செந்தமிழ் விரும்பும் செல்வி போற்றி
நானிலம் காக்கும் நாயகி போற்றி

கற்பக வல்லிக் கௌரி போற்றி
திருநிலை நர்யகித் தேவீ போற்றி
அங்கயற் கண்ணி அன்னையே போற்றி
சூடகக் கையுடைச் சூலியே போற்றி
கோமள வள்ளிக் குமரியே போற்றி

துர்க்கனை அழித்த துர்க்கையே போற்றி
அபிரா மவல்லி அம்மையே போற்றி
மூவரைப் பயந்த முதல்வியே போற்றி
கருநிறங் கொண்ட காளியே போற்றி
மலையிடப் பிரவா மணியே போற்றி

கோமள வல்லிக் குமரியே போற்றி
அம்புயம் தாங்கிய அணங்கே போற்றி
வேற்கண் அன்னை விமலியே போற்றி
வெற்றிவேல் தடக்கே வீரியே போற்றி
முக்கட் பரமனின் முதல்வியே போற்றி

குங்குமச் சாந்தணி குமரியே போற்றி
மலையத் துவசனின் மானே போற்றி
அறம்பள வளர்க்கும் அன்னையே போற்றி
திரிபுர சுந்தரித் தேவியே போற்றி
அன்ன பூரணி அம்மையே போற்றி

சச்சிதா னந்தர் சத்தியே போற்றி
உண்ணா முலையே உமையே போற்றி
வளமை நல்கும் வராமியே போற்றி
எண்குணத் தானின் இறைவியே போற்றி
வடிவுடைய நாயகி வாகியே போற்றி

ஆதி பராபரை அன்னையே போற்றி
எங்கும் நிறைந்த இறைவியே போற்றி
மதிநிகர் வதன வல்லியே போற்றி
கருணாம் பிகையே கமளியே போற்றி
குவளைக் கண்ணிக் கொம்பே போற்றி
அண்டர் போற்றும் அணங்கே போற்றி
தெவிட்டாத அமுதின் தேனே போற்றி
முந்தி கொடுக்கும் முதல்வியே போற்றி
இச்சா சக்தி இறைவியே போற்றி
சின்மயா னந்த செல்வியே போற்றி
சுத்த வித்யா சூலியே போற்றி
ஐந்தொழில் புரியும் ஐயையே போற்றி
கார்நிறக் குழலுடைய கௌரியே போற்றி
மட்டுவார் குழலி மாதே போற்றி
நிம்பனை மடித்த நீலியே போற்றி
தையல் நாயகித் தாயே போற்றி
கன்னியாய் நின்ற கௌரியே போற்றி
அகிலாண்ட நாயகி அம்மையே போற்றி
வாணனை மடித்த வாலையே போற்றி
முராரி போற்றும் முதல்வியே போற்றி
இந்திராட்சி இறைவியே போற்றி
குண்டலி சக்திக் கொழுந்தே போற்றி
அபயாம் பிகையே அழகியே போற்றி
அலையிடைப் பிறவா அமிழ்தே போற்றி
மதிப்பவர் மனமணி விளக்கே போற்றி
தண்ணருள் நல்கும் தாயே போற்றி
கனக மாமணிக் குன்றே போற்றி
சுந்தர வல்லித் தாயே போற்றி
ஆடற கலையின் அரசியே போற்றி
அருட்கடல் வடிவாம் அன்னையே போற்றி
மங்க ளாம்பிகை மானே போற்றி
உலகம் ஈன்ற உமையே போற்றி
திருவும் உருவும் உடையாய் போற்றி
உயிர்களின் பசிப்பிணி ஒழிப்பாய் போற்றி
ஏழிசைப் பயனாய் இருந்தாய் போற்றி

மகிடனை அழித்த மாட்சியாய் போற்றி
அங்குச பாசம் அணிந்தாய் போற்றி
அமரர் மயக்கை அகற்றினாய் போற்றி
எண்ணிய வண்ணம் ஈவாய் போற்றி
ஒளிக்கும் ஒளியாய் உயர்ந்தாய் போற்றி
அரும்பும் இளநகை அன்றாய் போற்றி
உள்ளுவார் உள்ளம் உறைவாய் போற்றி
யாழிசைப் பண்ணில் இசைத்தாய் போற்றி
பயிர்கள் பயன் தரப் பாலிப்பாய் போற்றி
அருளின் வடிவாய் அமைந்தாய் போற்றி
சார்ந்தவர்க் கின்பம் தருவாய் போற்றி
ஆடகத் தாமரை அன்னாய் போற்றி
கனகாம் பிகையே போற்றி போற்றி

திருச்சிற்றம்பலம்

ஓம் சக்தி

இற்றைக்கு 2000 ஆண்டுசளுக்கு முன்னர் தோன்றி பாரதமெங்கும் பேரிகை கொட்டி, சாக்தம் என்ற பெயரில் சக்தி வழிபாட்டினைப் போதித்தவர் ஆதி சங்கரர் இதன் முன்னரே ஆதித்தன், அம்புலி அங்கி, குபேரன், அமரர் தங்கோன், போதிப்பிரமன், புராரி, முராரி, பொதிகை, முனி, கந்தன், கணபதி, காமன் முதல் சாதித்த புண்ணியர் எண்ணிலர் என்று தமிழில் அந்தாதி வழங்கிய அபிராமி பட்டர் அவர்கள் கூறியுள்ளார்கள் ஆட்சி, ஆளடிமை, மக்கள் சுற்றம், பண், பெண், மணி, வாசணம் என்று அஷ்ட ஐசுவரியத்தையும் தர வல்லது ப்ராம்ஹீ, மஹேஸ்வரி கௌமாரீ, வைஷ்ணவி, வராஹீ, மஹேந்தரி, சாமுண்டி; மகாலக்ஷ்மி என்ற அஷ்ட சக்திகளே ஆகும். இந்த அஷ்ட சக்திகளின் ஆதாரங்களை ஒருங்கே இணைத்துத் தனதாக்கிக் கொண்டவளே அன்னை துர்க்காதேவி ஒன்பது என்ற இலகத்திற்கு மேல் எப்படி இலக்கம் இல்லையோ அப்படி துர்க்கை என்ற சக்திக்கு அப்பாற்பட்ட சக்தி பிரிதொன்றுமில்லை.

— ஆதாரம் : ஸ்ரீ துர்காதேவி திருவந்தாதி

# திருவிளக்கு பூசை வழிபாடு

## அர்ச்சனை

ஓம் சிவாய நம
ஓம் சிவசக்தியே நம
ஓம் இச்சா சக்தியே
ஓம் கிரியா சக்தியே நம
ஓம் சொர்ர்ண சொரூபியே நம
ஓம் ஜோதி லக்ஷ்மியே நம
ஓம் தீப லக்ஷ்மியே நம
ஓம் மஹா லக்ஷ்மியே நம
ஓம தன லக்ஷ்மியே நம
ஓம் தான்ய லக்ஷ்மியே நம
ஓம் தைர்ய லக்ஷ்மியே நம
ஓம் வீர லக்ஷ்மியே நம
ஓம் விஜய லக்ஷ்மியே நம
ஓம் வித்யா லக்ஷ்மியே நம
ஓம் ஜெய லக்ஷ்மியே நம
ஓம் வர லக்ஷ்மியே நம
ஓம் கஜ லக்ஷ்மியே நம
ஓம் காம வல்லியே நம
ஓம் காமாக்ஷி சுந்தரியே நம
ஓம் சுப லக்ஷ்மியே நம
ஓம் இராஜ லக்ஷ்மியே நம
ஓம் கிருஹ லக்ஷ்மியே நம
ஓம் சித்த லக்ஷ்மியே நம
ஓம் சீதா லக்ஷ்மியே நம
ஓம் திரிபுர லக்ஷ்மியே நம
ஓம் சர்வ மங்கள காரணியே நம
ஓம் சர்வ துக்க நிவாரணியே நம
ஓம் சர்வாங்க சுந்தரியே நம
ஓம் சௌபாக்கிய லக்ஷ்மியே நம

ஓம் நவக்கிரஹ தாயினே நம
ஓம் அண்டர் நாயகியே நம
ஓம் ஆனந்த சொரூபியே நம
ஓம் அகிலாண்ட நாயகியே நம
ஓம் அலங்ககர நாயகியே நம
ஓம் பிரமாண்ட நாயகியே நம
ஓம் மங்கள ரூபிணியே நம
ஓம் கர்பகக் காமினியே நம
ஓம் மன்மத பாணியே நம
ஓம் பர்வத புத்திரியே நம
ஓம் புவனேஸ்வரி தாயினே நம
ஓம் சங்கரி சௌந்தரியே நம
ஓம் மதியணி சூலிணியே நம
ஓம் கௌரி க்ருபாகரியே நம
ஓம் பஞ்சநல் பாணியே நம
ஓம் பால சாமுண்டேஸ்வரியே நம
ஓம் துர்க்கா ஸ்ரீ பரமேஸ்வரியே நம
ஓம் ஜெயந்தி மங்களகாளியே நம
ஓம் மஹிஷாஸ்ஸுர மர்த்தினியே நம
ஓம் லலிதாம்பிகையே நம
ஓம் வேதாந்த நிவாசினியே நம
ஓம் சந்தர கலாதரி ராணியே நம
ஓம் அலங்க்ருத பூரணியே நம
ஓம் அம்ருத ஸொரூபிணியே நம
ஓம் நித்திய கல்யாணியே நம
ஓம் சிருங்க நிவாஸினியே
ஓம் ஜகன் மோஹினியே நம
ஓம் அம்மை காமாக்ஷியே நம
ஓம் கருணா கடாக்ஷியே நம
ஓம் நீலாய தாக்ஷியே நம
ஓம் விசாலாக்ஷியே நம
ஓம் கமலாக்ஷியே நம
ஓம் கௌரியே நம
ஓம் அமுத நாயகியே நம

ஓம் அருந்தவ நாயகியே நம
ஓம் வெள்ளிமலை நாயகியே நம
ஓம் பராசக்தியே நம
ஓம் பாசாங்குச பாணியே நம
ஓம் கரும்புவில் தரித்தவளே நம
ஓம் நீலோற்பல தாரணியே நம
ஓம் முத்திதரும் அம்பிகையே நம
ஓம் காட்சி தரும் மங்கையே நம
ஓம் மனோன்மணி சவுந்தரியே நம
ஓம் காஞ்சிபுரக் கன்னியே நம
ஓம் கருணாகரத் தேவியே நம
ஓம் சிவ சிவ மகேஸ்வரியே நம
ஓம் பரமனிட ஈஸ்வரியே நம
ஓம் சிரோண்மணியே நம
ஓம் மனோன்மணியே நம
ஓம் நிரந்தரி துரந்தரியே நம
ஓம் நிரம்பரி பரம்பரியே நம
ஓம் அனாத ரட்சகியே நம
ஓம் அம்மை காமாக்ஷியே நம
ஓம் இலீலா விநோதினியே நம
ஓம் எழில் சுமங்கலையே நம
ஓம் அருமறையின் வரம்பே நம
ஓம் அருள் நிறை அம்மையே நம
ஓம் அரசிளங் குமரியே நம
ஓம் ஆலவாய்க் கரசியே நம
ஓம் ஆலால சுந்தரியே நம
ஓம் ஆனந்த வல்லியே நம
ஓம் இளவஞ்சிக் கொடியே நம
ஓம் சிவகாம சுந்தரியே நம
ஓம் ஈஸ்வரியே நம
ஓம் சிவயோக நாயகியே நம
ஓம் சிவானந்த வல்லியே நம
ஓம் சிங்கார வல்லியே நம

ஓம் கற்பின் அரசியே நம
ஓம் கதிரொளிச் சுடரே நம
ஓம் கிளியேந்திய கரத்தோய் நம
ஓம் நீலாம்பிகையே நம
ஓம் நீதிக்கரசியே நம
ஓம் திரிநிலை நாயகியே நம
ஓம் நாகேஸ்வரியே நம
ஓம் அன்ன பூரணியே நம
ஓம் தையல் நாயகியே நம
ஓம் மங்கள நாயகியே நம
ஓம் ஜோதி விளக்கே நம
ஓம் ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரியே நம

# திருவிளக்கு அகவல்

விளக்கே — திருவிளக்கே வேந்தன் உடன்பிறப்பே
ஜோதி மணிவிளக்கே—ஸ்ரீ தேவி பொன்மணியே
அந்தி விளக்கே அலங்கார நாயகியே
காந்தி விளக்கே காமாக்ஷித்தாயாரே
பசும் பொன்விளக்கு வைத்து பஞ்சுத்திரி போட்டு
குளம்போல் எண்ணெய் விட்டு கோலமுடன் ஏற்றி வைத்தேன்
ஏற்றினேன் நெய்விளக்கு என்தன் குடிவிளங்க
மாளிகையில் ஜோதியுள்ள மாதாவைக் கண்டு மகிழ்ந்தேன் யான்
மாங்கல்யப் பிச்சை மடிப் பிச்சை தாருமம்மா
பெட்டி நிறையப் பூஷணங்கள் தாருமம்மா
பட்டி நிறைய பாற்பசுவைத் தாருமம்மா
கொட்டகை நிறையக் குதிரைகளைத் தாருமம்மா
புகழுடம்பைத் தாருமம்மா பக்கத்தில் நில்லுமம்மா
அல்லும் பகலும் என் அண்டையில் நில்லுமம்மா

## தெரிசனம் காணல்

சேவித்தெழுந்திருந்தேன் தேவிவடிவங் கண்டேன்
வச்சிரக் கிரீடங் கண்டேன் வைடூரிய மேணி கண்டேன்
முத்துக் கொண்டை கண்டேன் முழுப்பச்சை மாலே கண்டேன்
சவுரிமுடி கண்டேன் தாழைமடல் சூடக்கண்டேன்
பின்னழகு கண்டேன் பிறைபோல் நெற்றி கண்டேன்
சாந்துடன் நெற்றி கண்டேன் தாயார் வடிவங் கண்டேன்
கமலத்திரு முகத்தில் கஸ்தூரிப் பொட்டுக் கண்டேன்
மார்பில் பதக்கம் மின்ன மாலேயசையக் கண்டேன்
தங்க ஒட்டியாணம் தகதகவென ஜொலிக்கக் கண்டேன்
காலிற் சிலம்பு கண்டேன் காலாழி பீலி கண்டேன்
மங்கள நாயகியை மனங்குளிரக் கண்டு மகிழ்ந்தேன்: அடியான் நான்

அன்னேயே அருந்துணேயே அருகிலிருந்து காருமம்மா
வந்த வினேயகற்றி மகாபாக்கியம் தாருமம்மா
தாயாரும் உன்றன் தாளடியில் சரணம் என்றேன்
மாதாவே யுன்றன் மலரடியில் நான் பணிந்தேன். காமாக்ஷி தாயே

## சுமங்கலிகள் பிரார்த்தனே

*இந்த ஸ்லோகம் மாங்கல்யதோஷம் தீர்த்து தீர்க்க சுமங் கலித்தன்மை கொடுப்பதால் தினமும் ஸ்நானம் செய்து திலக மிட்டு முடிந்ததும் 8 தடவைகள் ஜபம் செய்யவேண்டும்.*

ஓம்கார பூர்விகேதேவி வீணு புஸ்தகதாரிணி!
வேத மாதர் நமஸ்துப்யம் அவைதவ்யம் ப்ரயச்சமே!
பதிவ்ரதே மஹாபாகே பந்துஸ்ச ப்ரியவாதினி!
அவைதவ்யம்ச ஸௌபாக்கியம்!
தேஹித்வம் மம ஸுவ்ருதே!
புத்ராம் பௌத்ராம் ச ஸௌக்யம் ச
ஸௌமாங்கல்யம் சதேஹியே.

# மங்களம்

ஓம் ஜெய ஜெய ஓம் சக்தி
ஓம் ஜெய ஜெய ஓம் சக்தி
ஜெய ஜெய லலிதே ஜெய ஜெய வரதே
ஜெய ஜெய காயத்திரி

புவனேஸ்வரி உமை கௌரி மனோன்மணி
புரந்தரி நிரந்தரியே — அம்மம்மா

,, ,,

பவ தாரணி நரணி பரிபூரணி
பத்மினி பகவதி நீ — ஓம் ஜெய ஜெய
கமலாசனி காமாட்சி மீனாட்சி
காமேஸ்வரி காளி — அம்மம்மா

,, ,,

அமலே விமலே ராஜேஸ்வரி — சசி
ஆதி பராசக்தி — ஓம் ஜெய ஜெய
பிரம்மா விஷ்ணு சிவசக்தியின் வடிவே
பிந்து நாதரூபி — அம்மம்மா

,, ,,

காம வினைகளைப் போக்கியெமக்குக்
கருணை புரிந்திடுவாய் —
துர்க்கா லக்ஷ்மி சரஸ்வதி நீயே
துணை புரிவாய் தாயே — அம்மம்மா

,, ,,

சொர்க்காதிகளும் உன்னருளாலே
சொந்தமதாகிடுமே. — ஓம் ஜெய ஓம் சக்தி
மாய மலத்தால் மனது மயங்கி
மதிகெட வாழும் எமை — அம்மம்மா

,, ,,

தாயவளே நீ தயவு புரிந்தே
தந்திடு ஞானமதை — ஓம் ஜெய ஜெய
அங்கும் இங்கும் எங்கும் விளங்கும்
ஆனந்த வாரிதியே — அம்மம்மா

,, ,,

மங்களம் மங்களம் மங்களத்தாயே
மங்களம் அருள் வாயே.

# சமரசப் பிரார்த்தனை

ஸ்ரீ சுவாமி சிவானந்தா

கருணையும் அன்பும் நிறைந்த இறைவா!
எல்லா உயிர்களிலும் ஊடுருவி எங்கும் நிறைந்து
சர்வ வல்லமையும் பொருந்திய சர்வக்ஞான
சச்சிதானந்தப் பரம்பொருளாம் உம்மை வணங்கிப்
பணிகின்றோம். மெய்ப்பொருள் காணும் உள்ளம்
சமநோக்கு நிலைபெற்ற மனம், சிரத்தை பக்தி,
ஞானம் இவைகளை எங்களுக்கு அருள்வீராக
ஆணவம், காமம், பேராசை, கோபம், வெறுப்பு
இவைகளிலிருந்து எங்களை விடுவித்து எங்கள்
உள்ளங்களில் தூய தெய்வீகக் குணங்களை
நிரப்புவீராக. எல்லா உருவங்களிலும் பெயர்களிலும்
உம்மையே தரிசித்து சேவை செய்வோமாக.
எந்நேரமும் உம்மையே சிந்திப்போமாக.
என்றென்றும் உமது புகழைப் பாடுவோமாக
எப்போதும் எங்களது நாவினில்
உமது திருநாமம் விளங்குக.
என்றும் உம்முள்ளே நிலைபெற்று விளங்குவோமாக.

ஓம் தத்சத்

“ விளங்குக சைவநீதி உலகலாம் ”

யான் பெற்ற இன்பம் பெருக இவ் வையகம்

எல்லோரும் இன்புற்றிருப்பதேயல்லாம் வேறு ஒன்றும்
அறியேன் பராபரனே.

எல்லோரும் வாழ்க! இன்பமே சூழ்க!

விற்பனைக்குரியதல்ல - இலவச வெளியீடு

வெளியீடு: 8

இரண்டாம் பதிப்பு — 1989

❋ ❋ ❋

இப்புத்தகம் வேண்டியவர்கள்
தொடர்பு கொள்ளவும்:

**சாந்தி அச்சகம்**

14/c, பெர்னாந்து அவனியு,
நீர்கொழும்பு.

தொலைபேசி எண்: 031 - 2143